

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.7.2024) தருமபுரி, பாளையம் புதூர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் மகளிர் விடியல் பயணத் திட்டப் பயன்பாட்டிற்காக 20 புதிய நகரப் பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கி. சாந்தி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.7.2024) தருமபுரி, பாளையம்புதூர் ஊராட்சி அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், ”மக்களுடன் முதல்வர் திட்டத்தை ஊரகப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தி, 12,500 கிராம ஊராட்சிகளில் 2,500 முகாம்களின் மூலம் 15 அரசுத் துறைகளின் வாயிலாக 44 சேவைகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து, மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று, மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், முதல்வரின் முகவரி துறை சிறப்பு அலுவலர் த. மோகன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கி. சாந்தி, தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி, தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் முனைவர்.பி. பழனியப்பன், மாவட்ட வருவாய் அலுவலர் பிரின்ஸ்லி பால் ராஜ்குமார், கோட்டாட்சியர் காயத்ரி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் மற்றும் தி.மு.க.வினர், பயனாளிகள் கலந்து கொண்டனர்.



”மக்களுடன் முதல்வர் திட்டத்தினை ஊரகப் பகுதிகளுக்கு தருமபுரி மாவட்டத்திலிருந்து தொடங்கி வைக்க வருகைபுரிந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு சேலம் மாவட்டம், காமலாபுரம் விமான நிலையத்தில் நேற்று (11.07.2024) வரவேற்றார். உடன், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.7.2024) தருமபுரி, பாளையம் புதூர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு காப்பீட்டிற்கான அட்டைகளை வழங்கினார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், முதல்வரின் முகவரி துறை சிறப்பு அலுவலர் த. மோகன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கி. சாந்தி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



“மக்களுடன் முதல்வர்” திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்ததை யொட்டி வேலூர் மாவட்டம் காட்பாடியில் நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தொடங்கி வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், காட்பாடி ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் நிகழ்ச்சி!

# 100% தேர்ச்சி பெற்ற தனியார் பள்ளிகளுக்குப் பாராட்டு விழா!

### இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையேற்று பரிசுகள் வழங்குகிறார்!

**சென்னை, ஜூலை 12-**

**100% தேர்ச்சி பெற்ற தனியார் பள்ளிகளுக்கு பாராட்டு மற்றும் விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பாராட்டு விழா 4.8.2024 அன்று நடைபெற உள்ளது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பிக்கிறார்கள்.**



இது தொடர்பாக, பள்ளிக் கல்வித்துறையின், தனியார் பள்ளிகள் இயக்ககம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

2023-2024 ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் 2199 தனியார் மெட்ரிகுலேசன் உயர்நிலைப் பள்ளிகளும், பன்னிரண்டாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் 1750 தனியார் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளும் 100% தேர்ச்சி பெற்றுள்ளன. மேலும், தனியார் பள்ளிகளைச் சார்ந்த 78 LDIT 600T6J/ மாணவியர்கள் சர்வதேச அளவிலும், 255 மாணவ/ மாணவியர் தேசிய அளவிலும், 1579 மாணவ/ மாணவியர் மாநில அளவிலும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு பதக்கங்களை வென்றுள்ளனர்.

மேற்கண்டவாறு 100% தேர்ச்சி பெற்ற பள்ளி நிர்வாகிகள், பள்ளி முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களைப் பாராட்டி ஊக்குவிக்கவும், சர்வதேச/ தேசிய/ மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்களை வென்ற மாணவ/மாணவியரை மென்மேலும் ஊக்கப்படுத்தும் வகையிலும் தமிழ்நாடு அரசு சார்பில் முதன்முறையாக 04.08.2024 அன்று சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையிலும் பாராட்டு விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் 100% தேர்ச்சி பெற்ற பள்ளிகளுக்கும் சர்வதேச/ தேசிய/ மாநில அளவில் பதக்கங்களை வென்ற மாணவ/ மாணவியர்களுக்கும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டுச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பிக்க உள்ளார்கள்.

இவ்வாறு - தனியார் பள்ளிகள் இயக்குநர் தெரிவித்துள்ளார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.07.2024) அமெரிக்காவில் 2024 நவம்பரில் நடைபெற உள்ள உலக கேரம் போட்டியில் தமிழ்நாட்டின் சார்பில் பங்கேற்கவுள்ள மூன்று கேரம் விளையாட்டு வீராங்கனைகள் மற்றும் பயிற்றுநர் ஆகியோருக்கு செலவீனத் தொகையாக தலா ரூ. 1.50 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நியூஸிலாந்தில் நடைபெறவுள்ள ஜூனியர் காமன்வெல்த் வாள்வீச்சு போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜாய்ஸ் அஷிதா, இந்தியா சார்பில் பங்கேற்கவுள்ளார். ஜாய்ஸ் அஷிதாவின் விமான பயணச் செலவு – தங்குமிடம் – உணவு – போட்டிக்கட்டணம் உள்ளிட்ட செலவினங்களுக்காக ரூ.2 லட்சத்திற்கான காசோலையை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையிலிருந்து அவருடைய தாயாரிடம் வழங்கினார். இப்போட்டியில் வெற்றி வாகைசூடி, தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமைத் தேடித்தருவதோடு, தன்னைப் போன்ற இளம் வீரர்களுக்கு தங்கை அஷிதா முன்மாதிரியாக திகழட்டும் என அறிவுறுத்தினார்.



முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், (10.07.2024) அன்று தமிழக மருத்துவ கட்டமைப்புகளை மேம்படுத்த வாஷிங்டனில் உள்ள உலக வங்கி தலைமையகத்தில், உலக வங்கி தலைவர் மார்டின் ரைசர் (Mr. Martin Raiser, Regional Vice President, South Asia, World Bank) மற்றும் உலக வங்கி பிரதிநிதிகளுடன் நிதி ஆதாரம் மற்றும் செயல் திட்டங்கள் குறித்த அமர்வு மிக வெற்றிகரமாக நடைபெற்றது. இந்நிகழ்வில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக துணைவேந்தர் மரு.நாராயணசாமி ஆகியோர் உடன் இருந்தனர்.